"ஓம் வீராட் விஸ்வப் பிரமனே நமஹ"

# கிரிதர சிலாசாசனம்

## தவபாலன் கிரிதரன்



31.07.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



இமையாணன் மேற்கு,உடுப்பிட்டியைச் சேர்ந்த

# தவபாலன் கிரிதரன் (கபிலன்)

(கொழும்பு பல்கலைக்கழக கணணி விஞ்ஞானப்பிரிவு
2ம் வருட மாணவன் )

அவர்களின் சிவபதப் பேறு குறித்த

# கிரிதர சிலாசாசனம்

31.07.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

முத்தான விதையொன்று
முளைத்தெழுந்து மரமாகி
சத்தான நிழல் வழங்கும் தருணத்தில்
காலனவன் சாய்த்து விட்டான்
பித்தாகிக் கலங்குகின்றோம்
அழியா எழுத்தாகி இருப்பாயென நினைந்து
பின்னர் எழும் நினைவுகளை
வடித்து இன்று படையல் செய்தோம்.

இங்ஙனம்,
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் இதயத்தில் என்றும் நிறைந்து
உரு அறுத்து உலகு துறந்த உத்தமன்



மலராய் மண்ணில்
20 . 07 . 1989

மாலையாய் விண்ணில்
01 . 07 . 2012

அமரர்

# தவபாலன் கிரிதரன் (கபிலன்)

## அவர்களின் திதி நிர்ணய வெண்பா

நந்தன ஆண்டு ஆடித் திங்கள் நன்னாளில்
நீண்ட வளர்பிறை திரியோதசியில் - மாண்ட
பூதம் தவபால கிரிதரன் என்பான்
இதழ் சோர இறைபதம் அடைந்த தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ்ப் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்கர மூன்றுவிழி நால்வாய்
யானைமுக னைப்பரவி அஞ்சலிசெய்கிற்பாம்

## தேவாரம்

சிந்தா யெனுமால் சிவனே யெனுமால்
முந்தா யெனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள்ஏ சறவே.

## திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந்தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கரியோய் நீ
வேண்டி யென்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினால்லாச்
வேண்டும் பரி சொன் றுண் டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடை யெம் மற்றபுதக் கூத்தா
ஐம் பொன் செய் அம்பலத்தரசே
ஏறணி கொடி யெம் மீசனே யுன்னைத்
தொண்டனேன் இசையுமாறிசையே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே
புகுந்து புவனி யெல்லாம் விளங்க
அன்ன நடை மட வாள் உமை கோன்
அடி யோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறி தந்தடியார்க்கு
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிருசெவத்துறைவிளங்க
பூதபரம்பரை பொலியா புனிதவாய் மலர்ந்தழுத
சீதவளவயற் புகலீ திருஞானசம்மந்தர்
பாதமலர் தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பல காலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தென மாறனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தான சற்குண நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

## ஐயனார் துதி

ஐயரா அமளியானும் பரம் பொருள் மதனூ நல்கும்
ஐயனே யோலம் விண்ணோக் காதியே யோலம்
கையனே யீசா மெங்கள் கடவுளே யொல மெய்யார்
மெய்யனே யோலம் தொல்சீர் வீரனே ஏலம் ஏலா.

## வைரவர்துதி

தளம்பொலி மல ரோனாதி வானவர் தாழ்ந்து போற்ற
உளம் பொலி காசி மேவு முயிர்கள் செய் பா-வ மெல்லாம்
களம் பொலி தண்டாங் கண்டற வொழித்து முத்தி
வளம் பொலி வகை செய்கால வயிரவர்கண்பு வெய்வோம்.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் தவபாலன் கிரிதரன் (கபிலன்) அவர்களின் வாழ்க்கைச் சுவடுகள்

ஈழவழநாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தின் வடக்கே உள்ள வடமராட்சிப் பிரதேசத்தில் உடுப்பிட்டி விஸ்வகுலத்திலே வந்துதித்த எமது அன்புச் செல்வம் தவபாலன் கிரிதரன் அவர்கள் அமரர். தவபாலனுக்கும் கனகாம்பிகைக்கும் சிரேஷ்ட புத்திரனாக 1989ம் ஆண்டு ஜுலை மாதம் 20ம் திகதி பிறந்தார். தனது முன்பள்ளிக் கல்வியை உடுப்பிட்டியில் அமைந்த விஸ்வகுல விநாயகர் முன்பள்ளியிலே கற்று பின்னர் ஆரம்பக் கல்வி முதல் உயர்தரம் வரை தனது கல்வியை ஈழத்தின் முக்கிய பாடசாலைகளில் ஒன்றான யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கற்று சிறந்த பண்புள்ள மாணவனாகவும், பல பாராட்டுக்களைப் பெற்ற மாணவனாகவும் விளங்கினார்.

தனது சிறு வயதிலே தந்தையை இழந்த இவர் தனது கல்விக்காக கடுமையாக உழைத்தார். அதன் பயனாக தரம் 5ல் 1999ம் ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தார். 2005ம் ஆண்டு நடைபெற்ற சாதாரணதரப் பரீட்சையில் மிகவும் சிறந்த பெறுபேற்றினைப் பெற்று உயர்தரத்தில் கணிதப்பிரிவினைத் தெரிவு செய்து கல்வியைத் தொடர்ந்து வந்தார். 2010ம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழக கணனி விஞ்ஞானப் பிரிவிற்குத் தெரிவானார். தன்னைப்போலத் தன் சகோதரனையும் கல்வியில் திறம்படச் செய்தார்.

கல்வியில் மட்டுமல்ல சமூக, சமய பணிகளிலும் தன்னை இணைத்துக்கொண்டு அவற்றின் உயர்விற்காக உழைத்தவராவார். பல்கலைக்கழகக் கல்வியில் மட்டுமன்றி இதர இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் திறமையைக்காட்டிப் பாராட்டைப் பெற்றார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் 2ம் வருட மாணவனாகக் கற்றுக் கொண்டிருந்த வேளையில் டெங்கு என்னும் கொடிய நோயினால் தாக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றார், உறவினர், நண்பர்களுடன் அன்பாகவும், பண்பாகவும், புன்சிரிப்புடனும், நகைச்சுவையாகவும் உரையாடி வாழ்ந்து வந்த கபிலன் வைத்தியர்களின் முயற்சிகள் எதுவும் பயனளிக்காததாலும், அனைவரது பிரார்த்தனைகளும் முறியடிக்கப்பட்டதாலும் 01.07.2012ம் திகதி அன்று ஊர் அடங்கும் நேரத்தில் அன்பு நண்பர் பலர் ஏக்கத்துடன் பார்த்திருக்க இரவு 9 மணியளவில் எம்மைவிட்டு இவ்வுலகை நீத்தார்.

## தேற்றம்

மண் பிறந்த தெல்லாம் மரணிக்கும் இது உண்மை
பொன் கோடி கொண்ட மாமன்னர்கள் கூடப்பிடி சாம்பராவதும்
முன் பிறந்த தெல்லாம் முழுதாக அழிந்தொழிந்ததுவும்
கண்கொண்டு பார்த்ததும் கதைகளில் கேட்டறிந்ததும்
பின்பேன் இந்தக் கவலை பிடிசாம்ப லாவது உண்மை - இறப்பை
எண்ணி எண்ணி நெஞ்சு நொந்தே அழுவதுவும் முழுமடமை
பின்பே இனி நடப்பவையை பிழையின்றிச் செய்வோமே
விண்ணுலகில் கிட்டிணபிள்ளை விதிவழியே போனாரே- இனி
- கண் கலங்குவதைத் தான் விடுவோமே.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

இது விதி என்று பிறப்பு உண்டாகிறதோ? வாழ்வின் விதியும் அன்றே நிர்ணயிக்கப்படுகிறது. இதிலிருந்து எவருமே விலகிவிடமுடியாது. இதனை நாம் உணர்வோம். இறந்துபோன எம் உறவுக்காகப் பிரார்த்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயார் புலம்பல்

கபிலன் கபிலன் என்றே கதறியழுகின்றேன்
கன்றிழந்த பசுவாகிக் கண்ணீர் சொரிகின்றேன்
அம்மா என்றழைத்தே ஆயிரம் கதை சொல்வாய்
குழந்தைபோல் நீயும் குறும்புகள் பல செய்வாய்
நம்பியே நானிருந்தேன்
நாளை விடியுமென்று
தம்பியைத் தவிக்கவிட்டுத் தனிவழி
ஏன் சென்றாயோ?
என்ன சொல்லி நான் ஆற எப்படி உயிர்வாழ
என் இறுதி மூச்சு வரை உன் நினைவு அழியாது.

# உறவினர் புலம்பல்

வழிமூடி நீயுறங்க விழித்திருந்து
காத்திருந்தோம்
கண்திறந்து பார்ப்பாயென காவல்
செய்து நின்றோம்
உன்னுயிர் மீளும் என்று உறுதியுடன்
நாமிருந்தோம்
மண்ணுலகில் நீர் செய்த மாபணிகள்
போதுமென்று
விண்ணுலகில் பணிசெய்ய விரைந்துமே
சென்றீரோ.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் வாழ்வின் சந்தோசமே
# அண்ணா........



செல்லும் இடம்
சொல்லாமல் சென்றது
யார் குற்றம்..........
சொல்லாமல் எங்கு சென்றாய்?...........

ஒருமுறை மீளவந்து எனக்காக
சொல்லிவிட்டு போ எல்லாம்
நின் பாதச்சுவடுகளிலே
என் பயணம் தொடர.............

உன்னை எண்ணுகையில்
வெற்றிடமே எஞ்சுதடா அண்ணா(-----------)

உன்னுடன் நிழலாக
-தம்பி-

கடந்த காலம் திரும்புவதில்லை. வருங்காலம் எப்படி இருக்கும் என்று நமக்குத் தெரியாது. நிகழ்காலத்தை நல்ல முறையில் கழிப்பதே அறிவாளியின் செயல்.

பிறக்கும்போது ஆபரணங்களுடன் பிறப் பதில்லை. ஆனால், முற்பிறவியில் செய்த செயல்களின் வினைப்பயனை அணிந்து கொண்டு வருகிறோம். யாராக இருந்தாலும் இதில் தப்ப முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினம் தினம் தேடுகிறேன் உனை...........

தினமும் ஒவ்வொரு கணமும் உனைத்
தேடுகிறேன் - கபிலா
இது ஒரு பொய் வேசம் என்றுதான்
உணருகிறேனடா - கபிலா
நீ ஒரு கணம் கூட விழிக்காதிருந்த
வேளையிலும் - கபிலா
நான் ஒரு கணம் கூட உறங்காதிருந்தேன்
உன் வருகைக்காக......... - கபிலா
என் "செல்லத்தை" என்னிடம் தந்து விடு என்று
இறைவனிடம் இறைஞ்சிக் கேட்டேனடா - கபிலா
விடிய விடிய நெய் விளக்கு
ஏற்றினேனடா - கபிலா
உன் வருகைக்காக...................
உனை உடன்பிறவா சகோதரன் - என்று
சொல்ல கூட வாய் தடுமாறுதடா - கபிலா
என் உடன்பிறந்தவனுக்கும் மேலாக - உனை
முதலிடத்தில் வைத்தேனடா - கபிலா
இதற்காகவா நீ எனக்கு கொடுத்த
தண்டனை - கபிலா
தினமும் உன் முகவரியைத்
தேடி அலையும்.....................

அக்கா
பிரமிலா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமிகு தம்பி கபிலன்

விநாயகர் முன்பள்ளியில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கிய தவபாலன் கிரிதரன் (கபிலன்) கல்வியில் மட்டுமன்றி அங்கு இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளிலும் சரி, நிகழ்ச்சிகளிலும் சரி, பங்குபற்றிப் பரிசில்களைப் பெற்று அப்பகுதிப் பெற்றோர்களினதும் பாராட்டுக்களைப் பெற்றவர்.

"விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்ற கூற்றிற்கிணங்க தொடர்ந்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கல்வி கற்று அங்கும் சகல பரீட்சைகளிலும் திறமையாகச் சித்தியெய்தி அதிபர், ஆசிரியர்களின் மெச்சுதலைப் பெற்றுச் சிறப்பாக க. பொ. த உயர்தரப் பரீட்சையிலும் சித்திபெற்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் கணனி விஞ்ஞானத்துறையில் கல்வி பயின்று அங்கும் விரிவுரையாளர்கள், மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்று வந்தவேளையில் காலத்தின் கண்ணூறோ! என்னவோ யாமறியோம்.

இடையில் "டெங்கு" என்னும் கொடிய நோய் எனது தம்பியில் பீடித்துக் கொண்டது. அந்தவேளையில் அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு அங்கு அவரது நண்பர்கள், வைத்தியர்கள், உறவினர்கள் அனைவரும் அவரது உயிரை மீட்பதற்காக போராடினார்கள். ஈற்றில் எல்லோரையும் வெற்றிகொண்டு காலனவன் அவரது உயிரைப் பறித்தெடுத்தக் கொண்டான்.

இவர் தனது வாழ்நாளின்போது உடுப்பிட்டி விஸ்வகுல விநாயகர், ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கும், பொது நிகழ்வுகளிலும் ஆற்றிய சேவைகள் அளப்பரியது. காலனவன் அவரது உயிரைப் பறிக்காதுவிட்டால் தொடர்ந்தும் தன் மக்களுக்காகச் சேவையாற்றி இருப்பான் என்பதில் ஐயமில்லை. இவரது பிரிவால் துயருற்றிருக்கும் உடன் பிறவாச் சகோதரர் யாமும், ஊர் பொது மக்களும் எத்தனை ஆண்டு காலம் சென்றாலும் இவரை மறக்க முடியாது என்பது பொது துணிவு.

இவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல விநாயகப் பெருமானையும், காளி அம்பாளையும் இறைஞ்சுகிறோம்.

**சகோதரன் அருட்செல்வம் - தயாபரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். தவபாலன் கிரிதரன் அவர்களின் மறைவு குறித்த இரங்கற்பா

கபிலன் என்ற கருணையாளன்
கலைபல கற்ற கண்ணியவான்
ஆண்டது தொண்ணூற்று நான்கில்
விநாயகர் முன்பள்ளி தன்னில்
அடிவைத்த நாள் முதலாய்
ஆற்றல்கள் பலவும் கண்டோம்
பாலர் விளையாட்டதனில்
பரிசுகள் பலவும் பெற்றீர்
ஓட்டப் போட்டி யென்றால்
முதலிடம் உமக்கே என்பீர்
கற்றல் செயற்பாட்டினிலும்
கருத்துடன் நீர் மிளிர்ந்தீர்
விருப்புடன் பல்கலை சென்று
பொறுப்புடன் கற்கும் நாளில்
அடித்தளம் தந்த அன்னையை நீ மறக்கவில்லை.

அடிக்கடி வந்து நீரும் ஆதரவு தந்து சென்றீர்
விளையாட்டுப் போட்டிதனில் விருப்புடன் பணி செய்தீர்
நடுவர் பணி நன்கு செய்தே விளையாட்டில் கலந்து கொண்டீர்
நடுவர்கள் பரிசையும் நீர் நயத்துடன் பெற்றுச் சென்றீர்.

எங்கள் பள்ளியில் கற்றவன் நீ என்றே பெருமிதம் பெற்றிருந்தோம்
இன்றோ எம்மிடம் விடைபெற்று எங்கே சென்றீர் ஏங்குகின்றோம்
நன்றே நீர்செய் பணியதனால் நற்கதி அடைவீர் நம்புகின்றோம்
நடமிடும் நம்பிரானின் நற்றாள் இறைஞ்சுகின்றோம்.

**இமையாணன் மேற்கு, விநாயகர்**
**முன்பள்ளிச் சமூகம்**
**உடுப்பிட்டி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிவலம்

பூமியில் பிறந்த எவரும் இறந்துதான் ஆக வேண்டும் இது தான் நியதி. ஆனால் பூமியில் பிறந்து பின்பு இறந்த அனைவரும் எல்லோராலும் நினைவில் வைக்கப்படுவதில்லை. குறிப்பிட்ட ஒரு சிலரே அமரத்துவம் அடைந்த பின்னரும் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அந்த வகையில் கல்லூரியை விட்டு வெளியேறி சில ஆண்டுகள் ஆன பின்பும் கல்லூரித்தாயை மிக உள்ளன்போடு நேசித்த ஒரு ஆத்மா நமது கல்லூரிச் சமூகத்தால் சிறப்பாக நேசிக்கப்படும் ஒருவர் தவபாலன் கிரிதரன் ஆகும். கொழும்பிலே கல்வி கற்றாலும்கூட விடுமுறை நாட்களிலே ஊருக்கு வரும்போது பாடசாலையைத் தரிசிக்காது சென்ற காலம் கிடையாது. நாம் அடிக்கடி நகைச்சுவையாகக் கூறுவோம். "கிரிவலம் ஆரம்பமாகி விட்டது என்று" அந்த அளவிற்குப் பாடசாலைச் சமூகத்தோடு மிக அன்னியோன்னியமாக ஒன்றியவன் கிரிதரன்.

பொதுவாக ஒருவன் தான் வாழும் பிரதேசத்தில் எல்லோராலும் நேசிக்கப்படும் ஒருவனாக இருக்க மாட்டான். காரணம் அவனின் நடத்தைகள் ஆகும். வீட்டிற்கு நல்லவனாக இருக்கும் ஒருவன் வெளியில் அவ்வாறு நடப்பதில்லை. அதுபோல வெளிச்சமூகத்தால் போற்றப்படும் ஒருவன் வீட்டிலே நல்ல பெயர் பெற்றதில்லை. ஆனால் எமது அன்பிற்குரிய மாணவன் கிரிதரன் தான் கற்ற பாடசாலைச் சமூகத்தால் நேசிக்கப்பட்டான்.

அவனின் சகநண்பர்களால் நேசிக்கப்பட்டான். பிற இனத்தவர்களால் நேசிக்கப்பட்டான். தான் வாழ்ந்த சமூகத்திற்குச் சிறந்த நற்பணியாற்றி சமூகத்தவர்களால் நேசிக்கப்பட்டான். எல்லாவற்றிற்கும் மேலாக தன் குடும்பத்தவரால் மிகச் சிறப்பாக நேசிக்கப்பட்டான். ஆகவேதான் அவனின் பிரிவைத் தாங்கமுடியாத அனைத்து உள்ளங்களும் கண்ணீர்விட்டு கதறி அழுகின்றது. கிரிதரன் என்ற சிரித்தமுகம் எம்மைவிட்டு அகன்றுவிட்டது. ஆனால் அவனின் செயற்பாடுகள் அவனை நம் மனக்கண்முன் நாள்தோறும் கொண்டு வருகின்றது. உடற்பயிற்சிக் கண்காட்சியில் அவன் ஆடும் ஆட்டம் நம் மனக்கண்முன் தோன்றி மறைகின்றது. எல்லோரையும் தவிக்கவிட்டு விண்ணுலகம் சென்ற அந்தப் புனிதமான ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**ஆ. விமலராஜா**
**பிரதி அதிபர்,,**
**யா/உடுப்பிட்டி அ. மி. கல்லூரி,**
**வல்வெட்டித்துறை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்புக்குரிய மாணவன்.....................

செல்வன் தவபாலன் கிரிதரன் எமது பாடசாலை யா / உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் தரம் 1 தொடக்கம் உயர்தரம் வரை படித்து பல்கலைக்கழகம் தெரிவான ஒரு மாணவனாவான். தரம் 5 இலே என்னுடைய வகுப்பு மாணவனாக இருந்தான். சிறுவயதிலேயே கற்க வேண்டும். சிறந்த நிலைக்கு வரவேண்டும் என்ற துடிப்பான எண்ணம் வேரூன்றிக் காணப்பட்டதை என்னால் அக்கால கட்டத்திலேயே உணர முடிந்தது.

அவ்வாறே தனது கல்வியைச் சீராகத் தொடர்ந்து உயர்தரத்திலே கணிதப் பிரிவைத் தேர்ந்தெடுத்து சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொழும்புப் பல்கலைக்கழக கணனி விஞ்ஞானப் பிரிவுக்கு கற்கை நெறிக்குத் தெரிவாகி எமது கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்த மாணவனுமாவார். வசதி வாய்ப்புக்கள் அதிகமாக இல்லாத போதிலும், இவனுடைய முயற்சி ஒன்றே இவ்வாறான உயர்நிலையை கல்வியில் அடைய வைத்தது என்பது என்னுடைய கருத்தாகும்.

படிப்பு மாத்திரமன்றி விளையாட்டுப்போட்டிகளிலும் பங்குபற்றுவான். எமது பாடசாலையின் மாணவ முதல்வராகவும், இருந்த மாணவன் பாடசாலையைவிட்டு நீங்கி பல்கலைக்கழகம் சென்றாலும் அடிக்கடி பாடசாலைக்கு வருவான். என்னை வழியிலே எங்கு கண்டாலும் “teacher” என அன்புடன் அழைப்பான். நான் அவனைக் காணும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் “வெத்திலை போடுவதை விடடா” என உறுக்குவேன். “ஓம் teacher” என்று கூறி அவனும் ஒவ்வொரு முறையும் புன்முறுவல் புரிவான். எமது ஊரைச் சேர்ந்தவர்களாயினும், பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாயினும் கொழும்பு சென்றால் தானே முன்வந்து உதவி செய்யும் மனப்பாங்குடையவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் தேவையைப் பூர்த்தி செய்யாமலே பிறர் நலனுக்காக உழைப்பவன் என்பதால் அனைவரினதும் மனத்திலும் இலகுவாக இடம்பிடித்து விடுவான். நண்பர்களுடன் சகஜமாகவும், விளையாட்டாகவும் பழகினாலும் சமூகத்தில் சிறந்த ஒழுக்கமுடையவனாகத் திகழ்ந்தான்.

இவனுடைய இப்பிரிவு இவனுடைய குடும்பத்திற்கு மாத்திரமன்றி எமது கல்லூரிக்கும் ஓர் பாரிய இழப்பாகும். கிரிதரனின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி. வ. கைலயங்கிரிச்செல்வம்**
**பிரதி அதிபர்,**
**யா/உடுப்பிட்டி அ. மி. கல்லூரி,**
**வல்வெட்டித்துறை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் மறக்குமோ?...............


நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலம் மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்றே!

வாழ்ந்த மனிதர்கள் இறக்கின்றார்கள். இது நியதி. ஆனால் இறந்தபின்பும் வாழ்பவர்கள் வெகுசிலரே. எங்கள் அன்பு மாணவனே இறந்த பின்பும் வாழ்பவன் நீ! இன்று நேற்றா உன்னை எனக்குத் தெரியும். பிஞ்சு வயதில் இருந்தே உன்னை இனங்கண்டு கொண்டவன் நான். ரீச்சர் என்று நீ அழைக்கப்படும் அன்புமொழி....... மறக்குமோ நெஞ்சம்? உயர்தர வகுப்பில் நீ என்னிடம் மாணவனாக வந்தபோதும் உன்னைக் குழந்தையாகவே நான் கண்டேன். உன் குழந்தை முகமும், குறுஞ்சிரிப்பும், கபடமில்லாப் பேச்சும்..... மறக்குமோ நெஞ்சம்? ஆயிரம் மாணவர்கள் வருகின்றார்கள், கற்கிறார்கள், போகின்றார்கள். இதயத்தில் ஆழப்பதிந்த முத்தாய் சிலரே. அவற்றுள் அபூர்வ முத்து நீ! கல்வியை நேசித்தாய்! கல்லூரியை நேசித்தாய்!! குருவை நேசித்தாய்!!! எங்கள் கல்லூரியில் எந்தப்பகுதியில் உன் பாதம் படவில்லை? எந்த நிகழ்வு நீ இல்லாமல் நடந்தேறியிருக்கின்றது? எம் கல்லூரியில் சுவர்களுக்கும், மரங்களுக்கும் வாயில்லை, விழியில்லை. அதனால் அவை கதறிய ஓசை உனக்குக் கேட்கவில்லை. விழிநீர் சொரிவதை நீ அறியவில்லை. கல்லூரியின் ஒவ்வொரு நெஞ்சமும், கல்லூரியின் ஒவ்வொரு சடமும் உனக்காகத் தவிப்பதை, உன்வரவுக்காய் ஏங்குவதை, உன் குரலுக்காய் காத்திருப்பதை நீ அறிவாயோ?......

இறுதி நாட்களில் கூட என்னுடன் நீ இருந்தாய். உன் கனவுகள், கற்பனைகள், ஆசைகள் எல்லாவற்றையும் கூறினாய். உன் ஒவ்வொரு சொல்லும் என் காதிற்குள் இன்னும் ரீங்காரமாய் சுழல்கிறதே..... மறக்குமா நெஞ்சம்? தாயைப்போல் உணர்வைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர்ந்தாய், இன்று மட்டும் ஏன் தவிக்கவிட்டுச் சென்றாய். நீ இருக்குமிடத்தில் ஓர் சந்தோஷ அலை இருக்கும். நீ சொல்லும் சொல்லில் யதார்த்தம் இருக்கும். உன் நடை உடை பாவனையில் ஒருவித மாற்றம் இருக்கும். இவை எல்லாம் உன்னை மற்றவரிடம் வேறுபடுத்தி இனங்காட்டும். இதனால்தான் என்னவோ உன்னை எல்லோருக்கும் பிடிக்கும். கல்வியிலே சிறந்து விளங்கினாய். கலைகளிலே மிளிர்ந்தாய். கணனி விஞ்ஞானத்துறையில் உயர்ந்தாய். நீ பெரியவனாகி வருவாய் எங்கள் கல்லூரிக்குச் சேவை செய்வாய் என்றெல்லாம் எண்ணினோம் ஏமாற்றிவிட்டாய்.

நல்ல ஆத்மாக்களை இறைவன் விட்டு வைப்பதில்லை. நீ தூய ஆத்மா. மனிதருள் மாணிக்கம். கனி இருக்க காய் கவர்ந்து விட்டான் இறைவன். இன்றுகூட நீ இறைவனின் மார்பில் தான் மலராய் ஒளிர்வாய். எங்கள் அன்பு மாணவனே கிரி அமைதி கொள். என்றோ ஓர் நாள் நீ மீண்டும் வருவாய், கல்லூரித்தாயின் கண்ணீர் துடைக்க.

**உன் அன்பு ஆசிரியை,**
**திருமதி. ஆ. சிவகுமாரன்**
**பகுதித் தலைவர்,**
**பௌதிகவியல் ஆசிரியை,**
**யா/உடுப்பிட்டி அ. மி. கல்லூரி,**

**எவன் ஒருவன் சுகம், துக்கம் எல்லாவற்றையும் சமமாக எண்ணுகிறானோ அவனே வாழ்வின் உண்மையை உணர்ந்தவன் ஆவான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிதரன் - மாணவனுக்கொரு முன்னுதாரணம்

திங்களொன்று சென்றாலும் கிரிதரன் இவ்வுலகைவிட்டு பிரிந்த அந்தச் செய்தியை என் நெஞ்சம் இன்னும் நம்ப மறுக்கிறது. அந்தளவு தூரம் "கிரி" எங்கள் மனதினுள் ஆழ ஊடுருவி நிலைகொண்டுள்ளார். நேருக்கு நேர் முகங்கொடுத்து கள்ளமில்லா நெஞ்சுடன் எம்முடன் பாசமாகப் பேசும் "கிரி"யின் மொழிகள் இப்போதும் என் காதினுள் கேட்டுக் கொண்டே இருக்கிறது போல ஒரு பிரமை.

2008 A/L கணிதப் பிரிவிற்கு நான் முதன்முதலாக எனது கல்லூரியில் 'இணைந்த கணிதம்' பாடத்தைக் கற்பிப்பதற்காக 'கிரி'யின் வகுப்பிற்குச் சென்றபோது என்னை அன்போடு வரவேற்று உரிய மரியாதைகளுடன் எனக்கு ஒரு கற்பித்தலிற்கான அங்கீகாரத்தை வழங்கி எனது உயர்தரக் கற்பித்தலிற்கான துணிச்சலை ஏற்படுத்துவதில் "கிரி"யினதும் அவனது நண்பர்களினதும் பங்கு அளப்பரியது. எனது கற்பித்தல் பணியைத் தொடர்வதில் கிரியின் பங்கு குறிப்பிடத்தக்கது. தனது பரீட்சை நெருங்கிய காலங்களிலும் தொடர்ச்சியாகப் பாடசாலைக்கு வந்து தனது சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வார்.

மற்றவர்க்கு உதவுதல், பொறுமை, ஆசிரியர்களை மதித்தல், பாடசாலைசார் சமூக சேவைகள், இறைபக்தி, அன்போடு மற்றவர்களை அணுகுதல், மற்றவர் மனம்நோக எந்தச் செயற்பாடுகளிலும் ஈடுபடாமை, கல்லூரிப்பக்தி போன்ற உயரிய மனித நடத்தைகளில் "கிரி" இன்றைய மாணவர்களுக்கு ஒரு முன்னுதாரணம். பல்கலைக்கழக விடுமுறைக் காலங்களில் தனது வீட்டிற்கு வருகை தரும்போது தவறாது ஒவ்வொரு நாளும் கல்லூரியைத் தரிசனம் செய்து தனக்கு கற்பித்த ஆசிரியர்களை மட்டுமல்ல ஏனைய ஆசிரியர்களையும் சுகநலம் விசாரித்து அளவளாவிச் செல்வார். 'கிரியின்' கால்பாதம் படாத மண்ணே எமது கல்லூரியில் இல்லை எனும் அளவிற்கு பாடசாலையுடன் அதிசிறந்த தொடர்புகளையும், நல்லுறவுகளையும் பேணிய 'கிரி' இனி எமது பாடசாலைக்கு வரமாட்டார் என்ற கடினமான செய்தி என் நெஞ்சினுள் கனதியாகி என் மனதை இறுக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்மீது கொண்ட தீவிர ஆசிரிய பக்தியோ என்னவோ அவன் விடுமுறையில் இங்கு வரும்போது என் வீட்டையும் தரிசித்துச் செல்வார். நானும் அவருடன் ஒரு நண்பனுக்கு உரிய உறவுடன் பழக ஆரம்பித்தாலும் அவர் ஒரு "இடைவெளி" யைத் தொடர்ந்து பேணுவதில் உறுதியாக இருந்தார். ஒரு ஆசிரியருக்கும் மாண்வனுக்கும் எந்தளவு இடைவெளி வேண்டுமோ அதை 'கிரி'யே வரையறுத்து அதற்கு ஏற்ப பழகுவதில் 'கிரி'க்கு நிகர் 'கிரி'யே ஆவார்.

கிரியின் வகுப்புகுத் தோழர்களும் கிரி போலவே மிகவும் நல்ல மனம் படைத்தவர்கள். மற்றவர்க்கு உதவுபவர்கள். சிறந்த ஆசிரிய பக்தியுடையவர்கள். அவர்களை வழி நடத்துவதிலும் கிரி பெரிய ஒரு பங்களிப்பை வழங்கியிருந்தார். இடைக்கிடை சில நல்ல விடயங்களிற்காக தனது வகுப்பு நண்பர்களுடன் முரண்படினும் உடனடியாகவே அதனை மறந்து அடுத்த நிமிடமே மீண்டும் கலகலப்பாக பழக ஆரம்பித்து விடுவார் கிரி.

'மற்றவர்க்கு உதவுதல்' என்பதே கிரியின் மகுட வாசகம் எனலாம். இது தான் அவரின் மிகப் பெரிய பலம், மிகப் பெரிய பலவீனம் எனலாம். அதாவது மற்றவர்க்கு உதவுதல் என்னும் உயரிய பணிக்காக தன்னை வருத்தி உழைப்பார். இதற்காகத் தனது நலன்களை எல்லாம் தூக்கியெறிந்து செயலாற்றுவார். பல்வேறு தேவை கருதி கொழும்பு செல்லும்போது தானாகவே தேடிவந்து வேண்டிய உதவிகளையெல்லாம் செய்வார். தனது பல்கலைக்கழக விரிவுரைகளையெல்லாம் நிறுத்தி எமக்கு வேண்டியவற்றை வலிந்து செய்வதில் கிரி இமாலயம் போன்றவர். கிரியின் செயற்பாடுகளை இங்கு முற்றுமுழுதாகக் கூறிவிட முடியாது. இத்துடன் நிறுத்தி, 'கிரி'யின் நினைவுகளுடன் பிரியாமனதுடன் விடை கொடுக்கும் நான்;

**திரு. செ. ஜெயமோகன்**
**ஆசிரியர்**
**யா/உடுப்பிட்டி அ. மி. கல்லூரி,**
**வல்வெட்டித்துறை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். தவபாலன் கிரிதரன் அவர்களின் சிவபதப்பேறு குறித்த இரங்கற் செய்தி

கபிலன் என்று சிறியவர் முதல் பெரியவர் வரை அன்புடன் அழைக்கப்பட்ட அமரர் கபிலன் அவர்கள் இன்று எம்மைவிட்டு நீங்கினார் என்ற செய்தியறிந்து ஒரு கணம் எங்கள் புலன்கள் யாவும் செயலிழந்து மீண்டன. ஆம்! கபிலன் எமக்கெல்லாம் சாதாரணமானவன் அல்ல. சிறந்த பண்பாளன். புன்னகை தவழும் வதனத்தில் என்றும் குறும்புத்தனம் கலந்த புன்சிரிப்பைக் காணலாம். மடித்துக் கட்டிய வேட்டியுடன் நெற்றியில் திருநீற்றுப் பூச்சின் நடுவே சந்தனப் பொட்டுடன் எங்கள் ஊர் வீதிகளில் அவன் வலம் வருவான்.

அவன் நடந்தால் நிலம் நோகாது. வாய்திறந்து பேசினால் வார்த்தைகளுக்கு வலி எடுக்காது. அடிக்கடி தனது சிகை அலங்காரத்தை மாற்றிக் கொள்வதில் அலாதியான விருப்புடையவன். இப்படியே அவனது சிறப்பக்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

ஆலய விழாக்கள் ஆயினும் சரி, ஊரில் நிகழும் மங்கல, அமங்கல நிகழ்வுகள் ஆயினும் சரி எங்கும் அவன் பிரசன்னமாவான். நகைச்சுவை கலந்த உரையாடல்களுடன் காரியத்தில் கண்ணாக இருந்து செயல்களை ஆற்றும் வேகமும், விவேகமும் அவனுடன் கூடவே இருப்பவை. நாங்கள் அனைவரும் 'விஸ்வகுல இளைஞர்கள் என்ற கூட்டுணர்வுடன் கூடிக் கருமம் ஆற்றிய அந்த நாட்களை ஒரு கணம் எண்ணிப் பார்க்கின்றோம். இனியொரு சம்பவம் எங்களுக்கு அப்படி வாய்க்கப் போவதில்லை. அந்த வெறுமையை அந்த இடத்தை இனி யாராலும் ஈடுசெய்ய முடியாது. விழிகளின் அருகே ஒரு துளி நீர் எட்டிப் பார்த்து விடைபெறுகின்றது. விம்மலும் வெடிக்கும் அழுகுரலை அடக்கி அரற்றுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த மாதம் காளியம்மன் வாசலில் நீ கரகமாடிய காட்சி இன்னமும் எங்கள் கண்களைவிட்டு நீங்கவில்லை. கணனி விஞ்ஞானக் கல்வியைக் கற்றுவரும் வேளையிலும் பிறந்த மண்ணையும், பழகிய நண்பர்களையும், உடன் பிறந்த உறவுகளையும் நீண்டநாள் பிரிந்திருக்க முடியாத நெருங்கிய பிணைப்புடையவன் நீ. அடிக்கடி கொழும்பிற்கும், யாழ்ப்பாணத்திற்கும் பிரயாணம் செய்வாய். இறுதி வேளையில் கூட உனது இறுதி மூச்சு எங்கள் மண்ணில் காற்றுடன் கலந்து கொண்டது.

ஐந்து நாட்களாக நீ அசைவற்றுக் கிடந்தபோது ஊரே திரண்டு வந்து உன் உறக்கத்தைக் கலைக்கலாம் என்று அந்த வேளையில் யாரும் எண்ணவில்லை அதுவே உன் இறுதி உறக்கம் என்று. கபிலா நீ நோயுடன் போராடியபோது நாங்களும் இங்கே போராடினோம் எங்கள் தெய்வங்களுடன். வயது வேறுபாடின்றி எத்தனை நேர்த்திகள் வைத்தோம். எங்கள் ஊரில் அத்தனையும் வேண்டாம் என்று அமரர் உலகம் உன்னை அபகரித்துக் கொண்டது.

இனி என் செய்வோம். நாம் வாழ்வது சில நாட்களே. வாழும் நாட்களில் மற்றவர்களுக்கு உதவி செய்து வாழவேண்டும் என்று கூறுவாயே. இதுதான் உனது தத்துவம். நீ வாழப் பிறந்தவன் அல்ல. உனது சொல்லினாலும், செயலினாலும் எல்லோரையும் ஆளப்பிறந்தவன் நீ. ஆண்டுகள் பல கடந்தாலும் எங்கள் மனங்களில் உயிரோவியமாய் உலாவருவாய். உன் ஆத்ம சாந்திக்காகவும், இறைவன் திருவடியில் இணையில்லாப் பேரின்ப முத்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமையுடைத்து இவ்வுலகு"

உன் பிரிவால் வாடும்
விஸ்வகுல இளைஞர்கள்
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Memories that linger on

A beautiful bud has withered before it could spread its fragrance. Words fail me to express adequately my grief at his untimely demise.

Kirithatran's win some smile and simplicity always won him many friends and admirers. He was courteous and elders. He was sincere to his friends and loved them all without discrimination of caste, creed or religion.

Though Kiritharan lost his father in his early childhood, by his intelligence, hard work and the blessings of his trenchers he entered the University of Colombo to do his degree in Computer Science.

May the Good Lord grant his mother, brother and all his loved ones the peace of mind that passes all understanding to bear this great and irreparably loss.

The very large and representative crowd that was present at his funeral bears ample testimony to his popularity amongst his peers and the people in the village.

Though Kiritharan is no more with us physically, his pleasant memories will always linger on and on. Oh Kiritharan we miss you very badly God will make us all to overcome the shock and sorrow.

May his soul rest in Peace.

**Mrs. T. Maharatnam**

Chutty Teacher



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைப் பிரிந்த என் இனிய அண்ணாவிற்கு....

அன்பின் அண்ணா!

உன் முகவரி எனக்குத் தெரியாது. ஆனாலும் நான் வரையும் இம்மடல் நிச்சயம் உன்னை வந்து சேரும் என்றெண்ணி வரைகின்றேன்.

நீ அண்ணனாக மட்டுமல்ல, நல்ல நண்பனாக, ஏன் நல்ல ஆசானாய்கூட இருந்தாய். எனக்கு அண்ணன் இல்லை என்ற குறையை நிவர்த்தி செய்ய கடவுளால் அருளப்பட்ட அரிய பொக்கிஷம் நீ..... அடிக்கடி நீ எனக்கு மட்டும் தான் தங்கை உன்னை என்றும் பிரிய மாட்டேன் என்று கூறி "தங்கா! தங்கா!" எனச் செல்லமாய் அழைப்பாயே...... ஏன் என்னை இடையில் விட்டுப் பிரிந்தாய்? எனக்குப் பாடம் சொல்லித் தந்தது, தவறுவிடும் சந்தர்ப்பத்தில் கண்களால் என்னைச் செல்லமாய் அதட்டி பரிவோடு என் அருகில் அமர்ந்து புத்திமதி சொல்லியது..... உன் பாசத்தை எத்தனை விதமாய் என்மேல் பொழிந்தாய்.... அத்தனையையும் மறந்து ஏன் என்னைத் தவிக்கவிட்டுச் சென்றாய்?

என்னால் வேறு யாரையும் அண்ணாவாக நினைக்க முடியவில்லை. அப்படி "அண்ணா" எனவேறு ஒருவரை மானசீகமாகவும், பாசமாகவும் கூப்பிடவும் முடியவில்லை. என்ன செய்வேன் நான்? உன் பிரிவைத் தாங்குவேன் என நினைத்தா உன் தங்கையை விட்டுப் பிரிந்தாய்....?

ஏன்? ஏன்? ஏன்? என்ற வினா மட்டும் தான் என்னுள் எழுகிறது. எல்லாம் வெறுமையாய் இருப்பதாய் உணர்கிறேன். நீ என் கேள்விக்கு விடை சொல்ல மாட்டாயா என்ற ஏக்கத்துடன் காத்து நிற்கும்..............

**உன் அன்புத் தங்கை**

**சப்திகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையறுநிலைப்பா கபிலனிற்கா..........

உன்னை இழந்தது உண்மை என
உணர முற்படும் போது
உலையிலிட்ட இரும்பாகுதடா என் உள்ளம்
மரணத்திடம் கேட்டேன் என் மகிழ்ச்சியை
கொடுத்து விடு என்று
மரணம் மௌனித்தது, மறுபடியும் கேட்டேன்
"அவன் என்னை மகிழ வைக்கிறான்"
என பதிலளித்தது........
எங்கள் அழகனை எம்மிடத்தில்
கொடுத்து விடு என்றேன்
"என்னிடமுள்ளவர்களில் அவன்தான் அழகுடையவன்"
என்று கூறியது.........
என் மதியுடையவனை என்னிடத்தில்
கொடுத்து விடு என்றேன்
"அவன் எனக்கு மதியூட்டுகிறான்"
என்று சொன்னது
என் உறவுகள் உடைந்து போயுள்ளன
என்று சொல்லிக் கேட்டேன்
"என் உறவுகளைக் கட்டுகிறான்"
என்றது மரணம்.........
கபிலன் என் இனிய நண்பன் என்று
சொல்லிக் கதறி கதறி கேட்டேன்
"உனக்கு மட்டுமா?" எனக்
கோபத்துடன் கேட்டது....
கடைசியாக கபடமற்ற மனதுள்ளவன்
எனக்கு வேண்டுமென்றேன்
"மடையா எனக்கு அவனில் மிகமிகப்
பிடித்ததைக் கேட்கிறாயே?
என்றது அந்தக் கொடிய மரணம்....
தன்னலமற்றவன் சாவு தடங்களை விட்டுச் செல்லும்
ஆனால் - நீ தடங்களை மட்டுமல்ல
எக்காலத்திலும் மீள முடியாத் தவிப்பையும்
விட்டுச் சென்றுள்ளாயடா கபிலா!!!

உன் உயிரைக் காப்பாற்ற முடியாத
பாவியாகிய
ஸ்ரீ. கமலதர்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# But he's still there ...Forever in the air

A smile that I never forget
Calm and quite but his face is a happy set
Gives his. grin, ever since I met
Took all our hearts, there is no bet

Clouds are black and the skies are grey
No more the play, they all go pray
Death!! Never thought he'd be its next prey
Time is up and there ends the play
No more the smile no more life there
He looks so still and there we all stare
Weeping they're, everywhere despair
But he's still there, forever in the air.

Dedicated to my dearest friend Kritharan Thavabalan

**From : Udari**
University of Colombo
School of Computing
2nd year.

**என் உதயம்**

எப்பொழுது தருமம் குறைந்து அதர்மத்திற்கு எழுச்சி ஏற்படுகின்றதோ?
அப்பொழுது நான் என்னைப் படைத்துக் கொள்கிறேன்
சாதுக்களைக் காப்பதற்கும் துஷ்டர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதற்கும் யுகந்தோறும் வந்து உதயமாவேன்.

\- பகவத்கீதையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னல் கீற்றாய் எம் கிரி.........

நாளுக்குநாள் பதிவு செய்யப்படும் நிகழ்வுகள் காலமெனும் பரிமாணத்தின் பார்வையிலே சிக்குண்ட வண்ணம் சென்று கொண்டிருக்க வழமைக்கு விதிவிலக்காக ஆங்காங்கே காலத்தின் மைல் கற்களாக சில சம்பவங்கள் அடித்துச் செல்லமுடியாதபடி நினைவுகளின் ஆணிவேருடன் பிணைப்பில் இருந்தே நிலைக்கின்றன.

மெல்லத்தூறும் தூவாணங்களின் சங்கமிப்பில் சட்டெனத்தோன்றி மறையும் மின்னல் கீற்றினை ரசிக்கும் மானிடன் மின்னல் கீற்றினை பார்த்து ரசிப்பதையிட்டு மகழ்வதா? அல்லது மறைந்துவிட்டதே என்று கவலையில் மாழ்வதா? என்ற இரு பரிமாண உணர்வுகளுக்கிடையில் சிக்கும் மானிடராய் நாமிருக்க மின்னல் கீற்றாய் இருக்கிறான் எம் கிரிதரன்.

இருவருடம் பழகிவிட்டோம் என்ற மகிழ்ச்சியுடனான மனநிறைவு ஒருபுறம் - இனிவரும் காலமெலாம் இந்த மனநிறைவிற்கான உணர்வுகளனைத்தும் வெறுமையாகிறதே என்ற ஏக்கம் மறுபுறம்.

குழம்பியபடியும் கலங்கியபடியும் காலங்கள் சில கழிந்துபோக தீர்க்கமாக ஒரு முடிவின் முனையில் இருக்க வேண்டும் என்ற விருப்பம் எமக்கு!!! இருவருட காலத்தில் கிரி என்ற ஆனடா, எம் நட்பு எம்மில் பதிந்துவிட்ட நினைவுகளை அசைபோட அசைபோட இனிமையாகிறது. கணங்கள்! மேற்கொண்டு கடக்கவல்ல கணங்களையும் இந்நினைவுகளின் மீட்டலிலும் எடுத்துச் சென்றால் என்ன!!!.

நேற்றுவரை ஒரு முகத்தினூடாக ஒரு புள்ளியாகப் பார்க்கப்பட்டவன் இன்றோர் அனைத்துமாக பார்க்கப்பட்ட உள்ளம் சற்று கடினப்பட்டாலும் அதையே நோக்க விரும்புகிறது எம் உள்ளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மா ஒன்று பிறப்பெடுக்கிறது, நிகழ்வுகளால் வளர்க்கப்படுகிறது. காலவோட்டத்தால் ஆயுட்காலமெனும் புள்ளியின் நிறைவில் மறைகிறது என்ற வாழ்வியல் அடிப்படையிலே வாழ்ந்துவிடாது காலத்திலே சற்று விதிவிலக்காக கிரிதரன் என்ற நாமத்தின் அவசியம்இன்று பலராலும் உணரப்படுமளவிற்கு தன்னை உருவாக்கியிருக்கிறான் என்று எண்ணும்போது உள்ளம் பூரிப்படைகிறதே!!!

கிரிதரன் என்னும் நாமமும் மறையவில்லை. கிரிதரன் என்ற உள்ளமும் மறையப்போவதில்லை.

கள்ளமில்லா சிரிப்புடனே நட்புணர்வும் உடன்கொண்டே சங்கடங்கள் உடன் தீர்க்கும் எண்ணம் ஒன்று எங்கு நிலைக்கிறதோ, பரந்துபட்ட சமய ஈடுபாடும் வழக்கமான வில்லுப்பாட்டு சத்தங்களும் எங்கு உணரப்படுமோ, சரளமான நகைச்சுவை உணர்வும் வெளிப்படையான பேச்சுணர்வும், கலகம் தீர்க்கும் சமரச உணர்வும் எங்கு வெளிப்படுமோ அங்கேயே நெற்றியின நிறைக்கின்ற திருநீற்றுடன் அந்த உள்ளம் தூறல்கள் ஓய்ந்துவிடாத எம் மனவெளியில் மின்னல் கீற்றாய் சட்டெனத்தோன்றி மறைந்திடும்... நட்பின் நினைவுகளை மீட்டிய வண்ணமே...

ந. கோகுல்ராஜ் மற்றும் நண்பர்கள்
கொழும்பு பல்கலைக்கழக கணினி கல்லூரி,
2ம் வருட மாணவர்கள்.

தலைவனாக வேண்டும் என்ற எண்ணம் நமக்குள் இருக்குமானால், முதலில் தொண்டனாகச் சேவை செய்யும் அனுபவத்தைப் பெறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணெதிரே தோன்றுவாயா.....??

நீறிட்ட நெற்றியாய் உன் அறிமுகம்
என்றும் நினைவுகளில் மங்காது உன்முகம்

கனமான சூழ்நிலையையும் கலகலப்பாக்குவாய்
காலத்தால் கரையாத கவலையை எம்மில் தேக்கினாய்

உன் புன்னகை முகம் நெஞ்சில் மாறவில்லை
எம்மவர் கண்களில் தான் ஈரமில்லை

நட்புக்கு வரையறையை வாழ்ந்து உரைத்தாய்
என்றும் எம்மனதில் நீங்காமல் வாழ்ந்திருப்பாய்

இரத்தத்தின் உறவாக தினமும் கண்டோம்
இரத்தத்தை உறைய வைக்கும் கணமும் கண்டோம்

சிதையிலே உன்னை சில பொழுது பார்த்தது வெறும்
கதையென்று கூறி கண்ணெதிரே தோன்றாயோ......

ம. துவாரகன்
கொழும்பு பல்கலைக்கழக கணினி கல்லூரி,
2ம் வருட மாணவன்

சுயநலமற்ற சேவை மட்டுமே மனச்சாந்தியைத் தரவல்லது. நமக்குள் இருக்கும் தெய்வீக சக்தியை வெளிக்கொணர்ந்து விடும் ஆற்றலை சேவை கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிகளின் வலிகள்

நினைவுகள் பல சுமந்து பறந்த பட்டாம்பூச்சியே!
எம்மைவிட்டுத் தொலைவாக பறந்ததென்னவோ!

எம் இதயத் தவிப்புகள் எல்லாம்
உன் நட்புத்தான் கிரிதரா.....

ஆயிரம் உறவுகள் எம் வாழ்க்கைப் படகில் - அருகில் நூறு
பயணித்தாலும் ஆதரவாக உடனிருந்து துடுப்பு
அதிகம் போட்டவன் நீ மட்டும்தான் நண்பா!

எமக்கொரு நண்பனாய், நடமாடும் நூலகமாய்,
பல்கலை கழகமாய், பகுத்தறிவாளனாய், பசி போக்கும்
அன்னையாய் இருந்தாய் - ஆனால்
நீ உன் வாழ்நாளை முழுமையாகப் பெறவில்லையே நண்பா.....!

உதவியென கேட்டுவருபவர்க்கு உன்னிடம் உள்ளதை
கொடு என எமக்கெல்லாம் உபதேசித்துவிட்டு உன்னையே
எம்மிடம் பாதியில் பறித்துச் சென்றாயே நண்பா!

எத்தனையோ உறவுகளைச் சேகரித்தாயடா உன்
குறுங்கால வாழ்க்கையில்
அத்தனையையும் பாதியில் விட்டு சென்றதேன் நண்பா.....!

நட்பென அணைக்க நாமிருக்க நீ
மரணத்தை நட்பாக்கி கொண்டதேனடா.....!
உன்பிரிவினால் நாம் துன்பச்சூழலில் சிக்கித்
சிக்கித் தவிக்கிறோமடா நண்பா!

நின் நினைவுகளுடன்
பாடசாலைக் கால நண்பர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Some people will never forget

Flowers bloom in season,
Spread their scent with put any invitation,
Color our life with put any hesitation,
You were that kind of flower came to our lives in such a lovely season,
You were that kind of flower spread your loveliness without any invitation.
You were that kind of flower adds color to lives of everyone around you.

We will remember a flower not by when or where it was.

We will remember flower by its
Scent and color and what it does to our lives.
We will remember you about your friendliness stood behind any friend whenever they need you.

We will remember you about your courage never quit how much a task is difficult

We will remember you as the one who sang with us, whom danced with us in eyry happy moment.

We will remember you as the one cried with us, wept with us in every moment of sad.

Kiritharan we will always remember you as a brother, of the UCSC family

**By Nethanjan**
University of Colombo
School of Computing 2nd year.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு காய்ச்சல் ஓர் உயிர் கொல்லி நோயா?

இன்று இலங்கையின் பகுதிகளை மட்டுமல்லாது அயல்நாடான இந்தியாவினையும் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் நோயாக டெங்கு விளங்குகிறது. டெங்குக் காய்ச்சலால் நாளாந்தம் இலங்கையில் பலர் பீடிக்கப்படுகின்றனர். அவர்களில் சிலர் துர்அதிஷ்டவசமாக இறக்கவும் நேரிடுகிறது. டெங்கு காய்ச்சலில் நான்கு நிலைகள் உள்ளன.

1. டெங்குக் காய்ச்சல்
2. டெங்கு குருதிப் போக்குடன் கூடிய காய்ச்சல்
3. டெங்கு அதிர்ச்சி நிலை
4. நோய் அறிகுறிகளை வெளிப்படுத்தாத நிலை.

டெங்கு காய்ச்சலையுடைய நோயாளி ஒருவருக்குக் கடிக்கும் ஈடிஸ் இஜிப்ரை, ஈடிஸ் அல்போபிக்ரஸ் வகை நுளம்புகள் நோயாளியின் உடலிலிருந்து குருதியினை உறிஞ்சும்போது டெங்கு காய்ச்சலை ஏற்படுத்தும் நோயாக்கியான வைரஸ் நுளம்பினை அடைகிறது. இவ் டெங்கு வைரசுகளை தமது உடலினுள் கொண்டுள்ள மேற்குறிப்பிட்ட வகை நுளம்புகளை தொற்று ஏற்பட்ட நுளம்புகள் என அழைக்கப்படுகின்றன. இவ்வாறு தொற்று ஏற்பட்ட நுளம்புகள் ஓர் உடல்நலமான மனிதனுக்குக் கடிக்கும்போது அவருக்கு டெங்குக் காய்ச்சல் பெரும்பாலும் 5 7 நாட்களுக்குள் ஏற்படும். சிலர் மட்டும் நோய்குறிகளை வெளிக்காட்டாது டெங்கு வைரசுகளை அவர்களது உடலில் கொண்டிருப்பர். இவர்களின் நோயை எதிர்க்கும் ஆற்றலே இதற்குக் காரணமாகும். இவர்கள் ஓர் வகையில் ஆபத்தானவர்களும்கூட காரணம் இவர்களால் மற்றையவர்களுக்கு டெங்கு பரவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகள்

* ஈடிஸ் இஜிப்ரை * ஈடிஸ் அல்போபிக்ரஸ்

இவ்வகை நுளம்புகள் பொதுவாக காலை 6.00 மணிமுதல் காலை 10.00 மணிவரையும், மாலை 3.00 மணி முதல் மாலை 6.00 மணி வழரளுயுமே அதிகமாகச் சூழலில் பறக்கின்றன. இதனால் மேற்குறிப்பிட்ட நேரங்களே அவை அதிகமாகக் கடிக்கும் நேரமாகக் கொள்ளப்படுகின்றது.

டெங்கு நுளம்புகளைப் பொதுவாக இருண்ட இடங்களுள் உள்ள தெளிவான நன்னீரிலேயே முட்டைகளை இடுகின்றன.

- சிரட்டைகள்
- ரயர்கள்
- பிளாஸ்ரிக் பாத்திரங்கள்
- இளநீர்க் கோம்பைகள்
- நீர்த்தொட்டிகள்
- தகரப்பேணிகள்
- பொலித்தீன் பைகள்
- ஆழமற்ற கிணறுகள்
- பீலிகள்
- நீர் தேங்கியுள்ள கான்கள்
- பனங்கொட்டுக்களின் நடுவிலுள்ள தவாளிகள்
- வாழையின் அடித்தண்டில்
- பூச்சாடிகள்

மேற்கூறிய இடங்களில் நீர் தேங்கி இருப்பின் அவற்றினுள் இந்நுளம்புகள் முட்டைகளை இடம்.

இந்நுளம்புகள் நாளொன்றுக்கு ½ கிலோமீற்றர் தூரம் (500m) வரை பறக்கக் கூடியன.

டெங்கு நோயினைப் பரப்பும் நுளம்புகள் இடும் முட்டைகள் ஏறத்தாழ இரண்டு வருடங்கள் வரை வரட்சியைத் தாங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றல் உள்ளவை. எனவே இவை இலகுவில் அழியாது.

## டெங்குக் காய்ச்சல்.....

பொதுவாக ஒருவருக்கு காய்ச்சல் ஏற்படின், காய்ச்சல் ஏற்பட்ட நேரத்திலிருந்து மூன்றுவேளைகள் பரிசிற்றாமோல் (பனடோல்) மாத்திரைகளை எடுத்துப் பார்த்தல் வேண்டும். அவ்வாறு மூன்று வேளைகள் எடுத்தும் நோய் குணமாகாவிட்டால் உடனடியாக இரத்தப் பரிசோதனை வசதிகள் கொண்ட அரசாங்க வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்குச் செல்வதே மிகவும் சிறந்ததாகும். பொதுவாக முதல் மூன்று நாட்களில் சாதாராண காய்ச்சல் போன்று காணப்பட்டுப் பின்னரே நோயின் தன்மை தீவிரமடையும்.

நோய் அறிகுறிகள் (பொதுவானவை)- காய்ச்சல்

- தலையிடி
- மூட்டுக்களில் வலி
- வாந்தி
- நிணநீர்க் கணுன்களில் வீக்கம்
- மூட்டுக்கள் வீங்குதல்.
- தசை நோவு
- தோலின் கீழாக செந்நிற அடையாளம் தோன்றுதல்.

மேற்கூறிய அறிகுறிகளுடன் டெங்குக் காய்ச்சல் தீவிரமடைந்து டெங்கு குருதிப் போக்குடன் கூடிய நிலை ஏற்படின் பின்வரும் அறிகுறிகளும் ஏற்படலாம்.

- பற்களுக்கிடையில் முரசினால் குருதி வெளியேறல் (கசிவு)
- மூக்கினால் இரத்தம் வடிதல் (கசிவு)
- மலம் கறுப்பு நிறமாகக் காணப்படல்

தவிர நோயாளியின் நோய்நிலை மேலும் தீவிரமடைவதால் நோயாளியின் மூளைக்கு நோயாக்கியான வைரஸ் செல்லும் வாய்ப்புக்கள் ஏற்பட டெங்கு அதிர்ச்சிநிலை ஏற்படும். இந்நிலையில் நோயாளி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சுயநினைவை இழப்பார்
- வலிப்பு ஏற்படும்.

டெங்கு அதிர்ச்சி நிலைக்குச் செல்லும் நோயாளிகளில் பெரும்பாலானோா இறக்க நேரிடும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

## டெங்குக் காய்ச்சலை உறுதி செய்தல்

நோயாளிக்கு காய்ச்சல் ஏற்பட்டு மூன்று தினங்களின் பின்னர் அவரது குருதியினைப் பரிசோதிப்பின் குருதியிலுள்ள சலவகைகளுள் ஒன்றான குருதிச் சிறுதட்டுக்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைவடையும். உடல் நலமான மனிதனில் ஓர் அலகில் 250,000க்கும் மேற்பட்ட குருதிச் சிறுதட்டுக்கள் காணப்படும்.

டெங்கு வைரசினால் தாக்கப்பட்டு டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவரில் இது 10,000ஐ விட குறைவடையும் அல்லது இதற்கு அண்மித்ததாகவும் இருக்கும். நோயாளி டெங்குக் காய்ச்சல் பரவும் இடமொன்றிற்குச் சென்று வந்தவராகவும், அவரது குருதியில் குருதிச் சிறுதட்டுக்கள் 100,000 இனை விடக் குறையும் பட்சத்திலும், அவர் கொண்டுள்ள நோய் அறிகுறிகள் மேலே குறிப்பிட்டனவற்றுள் சிலவற்றைக் கொண்டிருபபினும்,அவர் டெங்கு நோயாளி என உறுதி செய்யப்படுவார்.

## டெங்கு காய்ச்சலுக்கான சிகிச்சை

காய்ச்சல் ஏற்பட்டு அது சந்தேகமானதாயின் உடனடியாக அருகிலுள்ள ஆய்வுகூட வசதியுடன் கூடிய அரச வைத்தியசாலையினை நாடுதல்.

வைத்தியரின் ஆலோசனைப்படி மட்டும் மருந்துகளை எடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் பூரணமாகக் குறைவடைந்து நோயாளியின் உடல் ஆரோக்கியமாகும் வரை கட்டாயமாக ஓய்வெடுத்தல்.

போதுமான நீராகாரம் அருந்துதல் (நாளொன்றுக்கு 5 லீற்றருக்குக் குறையாது கொதித்தாறிய நீர், இளநீர், கஞ்சி போன்றன)

டெங்கு நோயாளி எப்போதும் டிஸ்பிரின், அஸ்பிரின், புறூ..பன் போன்ற மருந்து மாத்திரைகளை எடுத்தல் கூடாது.

மேற்படி செயற்பாடுகளை காலம் தாழ்த்தாது செய்யின் டெங்கு காய்ச்சல் இலகுவில் குணமாகி விடும்.

✧ டெங்கு காய்ச்சல் ஏற்பட்டு முதல் மூன்று நாட்களினுள் உரிய சிகிச்சை பெறும் பட்சத்தில் ஆரம்பத்திலே நோய் குணமாகும். ஆயினும் நோயாளி அதன் பின்னர் ஓய்வின்றி இருப்பாராயின் காய்ச்சல் திடீரென அதிகரித்து அடுத்த நிலைகளுக்குச் சென்று பாரதூரமான விளைவுகளும் ஏற்பட வாய்ப்புண்டு.

## டெங்கு காய்ச்சலினால் மரணம் ஏன் ஏற்படுகிறது?

- ஆரம்பத்திலே நோயினை நிர்ணயம் செய்யாமை
- தேவையற்ற அல்லது வீணான கால தாமதம்
- டிஸ்பிரின், அஸ்பிரின் போன்ற வலி நிவாரணிகளை
- மருத்துவரின் ஆலோசனையின்றி உட்கொள்ளல்.
- போதுமானளவு நீராகாரம் அருந்தாமை
- பூரணமாக ஓய்வு எடுக்காமை

காய்ச்சல் ஏற்பட்டு சில தினங்களுள் அது குணமடைந்தது போல இருக்கும். இந்நிலையில் அது குறைவடைந்து விட்டது என எண்ணி ஓய்வு எடுக்காது வேலைகளில் ஈடுபட்டு மீண்டும் டெங்கு காய்ச்சல் அதிகரிக்கும்போது........

கைராசியான வைத்தியர் என உள்ளூர் வைத்தியரிடம் இரத்தப் பரிசோதனை எதுவும் மேற்கொள்ளாது தொடர்ந்து சிகிச்சை பெறுதல் ( காய்ச்சல் ஏற்பட்டு 10 நாட்கள் வரை) இது நோய் சிக்கலான நிலையினை அடைய வழிவகுத்து மரணத்திற்கு இட்டுச் செல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலட்சியமான மனப்பாங்கு
தவறான நோய் நிர்ணயம் (உரிய இரத்தப் பரிசோதனை செய்யாது நடைபெறுவது)

எனவே டெங்கு ஓர் உயிர்கொல்லி நோய் அல்ல. நோயாளியின் அசமந்தப்போக்கும், உரிய வைத்திய சிகிச்சையின்மையும் மரணம் ஏற்படக் காரணமாகும்.

**டெங்கு வைரஸ்...**

டெங்கு காய்ச்சல் "RNA வைரஸ்" எனும் ஓர் வகை வைரசால் ஏற்படுகிறது.

இதில் நான்கு வகைகள் உள்ளன.

ஓர் வகை வைரசினால் காய்ச்சல் ஏற்படின் அதேவகை வைரசினால் மீண்டும் காய்ச்சல் ஏற்படாது. ஆயினும் ஏனைய மூன்று வகை வைரசுக்களில் ஏதேனுமொரு வகையினால் மீண்டும் காய்ச்சல் ஏற்படலாம்.

## டெங்குக் கட்டுப்பாடு

எமது பகுதியில் டெங்கு காய்ச்சலை பூரணமாகக் கட்டுப்படுத்த மக்கள் கூடிய அக்கறை செலுத்துதல் வேண்டும். அவர்களது பூரணமான பங்களிப்பு டெங்குக் கட்டுப்பாட்டிற்கு மிக அவசியமாகும்.

## டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

1. சுற்றாடலில், பொது இடங்களில் கைவிடப்பட்ட காணிகளில் நீர் தேங்கியிருக்க ஏதுவான கொள்கலன்களை வெட்டிப் புதைத்தல் அல்லது எரித்து விடுதல்.
2. கைவிடப்பட்ட காணிகளுள் அல்லது வளவுக்குள் உள்ள நுளம்புகள் மறைந்திருக்க ஏதுவான பற்றைகளை வெட்டித் துப்பரவு செய்தல்.
3. தேவையற்ற விதத்தில் டெங்கு பரவும் இடங்களிற்குச் சென்று வருவதை இயன்றளவு தவிர்த்தல்.
4. வீடுகளில், பாடசாலைகளில், தனியார் கல்வி நிலையங்களில், வியாபார நிறுவனங்களில் கழிவுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் குப்பைக் கூடைகளிலேயே இடுதல்.

5. டெங்கு பரவும் இடமொன்றிற்குச் சென்று சில தினங்கள் தங்கியிருந்துவிட்டு மீண்டும் ஊருக்கு திரும்பியபின் காய்ச்சல் ஏற்படின், உடனடியாக அரச வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெறுதல்.

6. டெங்கு பரவும் இடமொன்றிற்கு அவசியம் கருதிச் செல்லவேண்டியிருப்பின் முழுநீள ஆடைகளை அணிவதுடன், நுளம்புகள் கடிக்க ஏதுவான இடங்களுக்கு புல்லெண்ணெய், சித்தாலேப போன்றன தடவி நுளம்புக் கடியினைத் தவிர்த்தல்.

7. டெங்கு காய்ச்சல் நோயாளியுள்ள வீட்டிலோ அல்லது அயலில் உள்ள வீட்டிலோ யாருக்காவது காய்ச்சல் ஏற்படின் உடனடியாக பகுதிக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

8. டெங்குக் காய்ச்சல் பரவுதலைக் கட்டுப்படுத்த மிகச் சிறந்த வழி டெங்கினைப் பரப்பும் நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதே ஆகும். எனவே தினசரி சுற்றாடலைச் சுத்தமாகவும், நுளம்புகள் பெருகாதவாறும் பராமரிப்பது மிகவும் அவசியமாகும்.

எனவே டெங்குக் காய்சலினால் பீடிக்கப்பட்டு அமரத்துவமடைந்த அமரர். சிவபாலன் கிரிதரனின் இந்நினைவு மலரூடாக இனிவரும் காலங்களில் எமது பகுதியில் டெங்கினால் வீணான உயிரிழப்புக்களைத் தவிர்க்கும் பொருட்டு அனைவரும் ஒன்றிணைந்து டெங்கினைக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுப்போம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

திரு. ம. பிரபாகரன்
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்
உடுப்பிட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# அவசர தொலைபேசி அழைப்புக்கு.....

யாழ் அரசினர் வைத்தியசாலை – 3348

திருநெல்வேலி நேர்சிங்கோம் – 2263
கோலிகுறொஸ் – 2512
அப்பலோ வைத்தியசாலை – 3305
சம்பந்தர் சிகிச்சை நிலையம் – 7259
நடன முருகன் வைத்தியசாலை – 3635
யாழ். பொது நூலகம் – 2019
யாழ். மத்திய பேரூந்து நிலையம் – 2281
கோண்டாவில் பஸ் டிப்போ – 2207
யாழ். மாநகரசபை – 2275
யாழ். மின்சாரசபை – 2496
யாழ். தீயணைக்கும் படை – 3556
யாழ். செயலகம் – 2235
யாழ். பிரதேச செயலகம் – 2209
யாழ். பொலிஸ் நியைம் – 2222
யாழ். நீதிமன்றம் – 2357
யாழ். தபாலகம் – 2250
சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் – 2026
சென்ஜோன் அம்புலன்ஸ் – 3166

போரூட் – 2177
UNHCR – 2005
கலோஸ்ரஸ்ற – 3779
(கண்ணிவெடி அகற்றும் பிரிவு)
TRRO – 2416
கைதடி முதியோர் இல்லம் – 0602
– 213526
உதயன் பத்திரிகை – 2030, 2083, 3837
வலம்புரி – 3387
தினக்குரல் – 2127
கற்றன் நஷனல் வங்கி – 2787
இலங்கை வங்கி – 2760
வர்த்தக வங்கி – 3148
தேசிய சேமிப்பு வங்கி – 2735
யாழ். ரெலிக்கொம் – 2211
எக்ஸ்போ எயார் – 6297
லயன் எயார் – 2504
செரண்டிப் – 3916

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் இரவு – பகல் அம்புலன்ஸ் சேவை**



- 222 2562
- 077 3979389
- 222 9792
- 077 3979390
- 060 221 5555



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Kachcheri - Jaffna | 0212222235 |
| Kachcheri - Jaffna (G.A) | 0212222335 |
| Kachcheri - Jaffna (A.O) | 0212222775 |
| Kachcheri - Jaffna (P.D) | 0212222774 |
| Divisional Secretariat - Pointpedro | 0212263259 |
| Divisional Secretariat - Karaveddy | 0212263258 |
| Divisional Secretariat - Planing | 0212264671 |
| Predesiya Shaba - Point Pedro | 0212263273, 3249 |
| Predesiya Shaba - Karaveddy | 0212263271 |
| Predesiya Shaba - Sub office Nelliadi | 0213202118 |
| Urben Counsil - V.V.T | 0212263973 |
| Urben Counsil - P.P.D | 0212263213 |
| D.S Office Maruthankerny | 0213214851 |
| D.S Office Karaveddy, Samurthy | 0212264952 |
| | |
| Uduppiddy American Mission College | 0212264115 |
| Uduppiddy Girl's College | 0212263767 |
| Nelliady M.M.Vidyalayam | 0212263017 |
| Methadist Girl's College | 0212263020 |
| Vada. Hindu College | 0212263221 |
| Karaveddy Vigneswara College | 0212263138 |
| Vada. Mathya Mahalir | 0212264688 |
| PointPedro Hardley College | 0212263292 |
| | |
| Vathiry Paramanantha | 0212263136/4036 |
| Udupiddy MPCS | 0212264036 |
| Udupiddy Post Office | 0212263007 |
| Jaffna Post Office | 0212222708 |
| PPD - NRTB | 0212263266 |
| Jaffna NRTB (Bus Stand) | 0212222281 |
| | |
| Esons funeral service | 0212222695 |
| Oli Akam funeral service | 0212222070 |
| White Housefuneral service | 0212222738 |
| | |
| Uthayan Press - Jaffna | 0212229933/9944 |
| Valampuri | 0212223378/7644 |
| Thinakural | 0212222127 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Jaffna Teaching Hospital | 0212222261 |
| Jaffna Blood Bank | 0212223063 |
| P.P.D Base Hospital | 0212263261 |
| P.P.D Base Hospital Fax | 0212263262 |
| V.V.T District Hospital | 0212263530 |
| Nursing Home - Thirunelvely (Northern C.H) | 0212222263 |
| Holy Cross | 0212222512 |
| Apolo Hospital | 0212223305 |
| Sampanthar Clinic | 0212227259 |
| Point pedro Base Hospital Ambulance | 0212264482 |
| Karaveddy MOH | 0213207153 |
| Jaffna DPDHS | 0212222278 |
| PPD. RDA | 0212263196 |
| Director of Education | 0212222449 |
| SriLanka Telecom - Karaveddy | 0212222498 |
| C.E.B - Chunnakam | 0212223001 |

பணமும், வசதி வாய்ப்புகளும் வந்து போகக்கூடியவை. ஆனால் மனித சமூகம் செல்வத்தை தேடி ஓடிக்கொண்டு இருக்கிறது. எனவே வாழ்க்கை பொருளுடையதாக இருக்க வேண்டுமானால், பொருள் தேடுவதோடு அருளையும் தேட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னார் பல்கலைக்கழக காலத்தில்.......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவத்தின் தேடல்கள்

01) மனித உடலின் இருதயத் துடிப்பைத் தூண்டும் பகுதி - பேஸ்மேக்கர்
02) உடலிலுள்ள மிகப் பெரிய இரத்தக் குழாய் தொகுதி - பெருநாடி
03) மனித உடலில் உள்ள எலம்புகளின் எண்ணிக்கை - 206
04) மனித உடலில் உள்ள தசைகளின் எண்ணிக்கை - 639
05) மனித உடலில் உள்ள நரம்புகளின் எண்ணிக்கை - 7200
06) மனித உடலிலுள்ள நரம்புத் தொகுதிகளின் எண்ணிக்கை - 507
07) மனித உடலிலுள்ள மிகச் சிறிய எலும்பு - ஏந்தியுரு எலும்பு (3mm நீளம்)
08) ஒரு நாளில் இதயம் துடிக்கும் தடவைகள் - 1 இலட்சம் முறை
09) மார்பைப் பாதுகாக்கும் எலும்பின் பெயர் - நிப்ஸ்
10) மனித உடலில் மிகவும் கெட்டியான தோல் உள்ள இடம் - பாதம்
11) மனித உடலில் வாழும் ஒட்டுண்ணி - கோலோன்
12) அனைத்து வகை இரத்தத்துடனும் ஒத்துப்போகும் இரத்த வகை - AB வகை
13) கீழ்த்தாடையிலுள்ள எலும்பின் பெயர் - மாண்டிபின்
14) மலேரியா என்பதன் பொருள் - சுத்தமற்ற காற்று
15) சின்னம்மை நோயை உண்டாக்கும் வைரஸ் - வரிஷெல்லா
16) மனிதன் வாழத் தேவையான ஒட்சிசன் அளவு - 6.9%
17) மனித மூளையின் எடை - 1.4 kg
18) உடலின் மெல்லிய சருமம் - கண்மை
19) ஈரலில் பாதுகாக்கப்படும் விற்றமின் - விற்றமின் A
20) ஒரு குழந்தைக்கு இருக்கும் பற்களின் எண்ணிக்கை - 20
21) மனிதனின் முதுகுத் தண்டின் எண்ணிக்கை - 33
22) மனித உடலின் மிகப்பெரிய உறுப்பு - கணையம்
23) இதயம் ஆக்கப்பட்டுள்ள தசைகள் - கார்டியத்தசை
24) இதயத்தைச் சுற்றியுள்ள சவ்வு - பெரிகார்டியம்
25) மூளையிலுள்ள நியூரான்களின் எண்ணிக்கை - 1400 கோடி
26) செரித்தல் திரவத்திலுள்ள அமிலத்தால் வரும்நோய் - பெப்டிக் அல்சர்
27) "சைலன்ட் கில்லர்" எனப்படும் நோய் - இரத்த அழுத்தம்
28) மருத்துவ அறிவியலின் தந்தை - ஹிப்போகிரட்டீஸ்
29) மனித உடலில் மிக நீளமான தனி எலும்பு - தொடை எலும்பு
30) மனித உடலில் மிகவும் குளிர்ச்சியான பாகம் - மூக்கின் நுனி
31) மனித இதயத்தின் சராசரி எடை - 340 கிராம்கள்
32) உடலிலுள்ள மிகப்பெரிய சுரப்பி - ஈரல்
33) உடம்பில் இரத்த ஓட்டமில்லாத பகுதி - விழிவெண்படலம்
34) தடிமனை ஏற்படுத்தும் வைரஸ் - றேனோ வைரஸ்
35) மனித உடலின் வியர்வைத் துவாரங்களின் எண்ணிக்கை - 20 இலட்சம்
36) மனித உடலில் முதலில் அறுவைச் சிகிச்சை முறையை அறிமுகம் செய்தவர் - யோகம் விஸ்டர்
37) மூளையில் கல்வியை மட்டுப்படுத்தும் பாகம் - கார்டைக்ஸ் பெருமூளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கின்றோம்



எம் செல்வன் அமரர் தவபாலன் கிரிதரனின் மறைவுச் செய்தி கேட்டு

- உடன் வந்து உதவியோருக்கும்,
- தொலைபேசி வாயிலாகவும், நேரே வந்தும் ஆறுதல் கூறியோர்க்கும்,
- மரணச் சடங்கிலிருந்து இறுதி ஊர்வலம் வரை கலந்து கொண்டோர்க்கும்,
- அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டோர்க்கும்,
- பலவழிகளிலும் உதவிய யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிச் சமூகத்தினருக்கும், விநாயகர் முன்பள்ளிச் சமூகத்தினருக்கும், விஸ்வகுல இளைஞர்களுக்கும், பல்கலைக்கழக மாண வர்களிற்கும்,
- அமரரின் பிறந்த நாளன்று இரத்ததான ஏற்பாடு ஒழுங்குகள் செய்த கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களுக்கும் நண்பர்களுக்கும் மற்றும் குருதிக்கொடை வழங்கிய வர்களுக்கும்,
- கிரிதரன் அவர்கள் வைத்தியசாலையில் நோய்வாய்ப்பட்டு இருந்த வேளை அரும்பாடுபட்ட வைத்தியர்களுக்கும், அவர் சார்ந்தோருக்கும், நண்பர்களுக்கும், அயலவர்களுக்கும்,
- இம்மலரை வெளியிட உதவிய பிள்ளையார் அச்சகத்தார்க்கும், ஏனையோர்க்கும்,
- அமரரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும், சபிண்டீகரண நிகழ்விலும் கலந்து கொண்டோருக்கும்,
- இம் மலருக்குப் பலவகையிலும் உதவி புரிந்தோர்க்கும்,

**எம் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிலாசாசனம்

"சிலாசாசனம்" என்பது "அழியா எழுத்து" என பொருள்படும். காற்றாலும் மழையாலும் கால வெள்ளத்தாலும் அழியா எழுத்தே சிலாசாசனம் ஆகும். கல்லெழுத்து கல்வெட்டு என்றும் இதனைக் குறிப்பிடுவார்கள். வாழ்ந்து மடிந்தவர்கள் எல்லோருமே வாழ்பவர்களின் மனதில் சிலாசாசனம் தான் கிரிதரன் (கபிலன்) நம் மத்தியில் வாழ்ந்த காலம் சிறிதாயினும் யுகங்கடந்து அகம் எங்கும் இருக்கின்ற சிலாசாசனம் தான் அவரது நினைவுகளை யாராலும் எக் காலத்திலும் அழித்துவிட முடியாது.

-சுபம்-

பிள்ளையார் அச்சகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org